

# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 58

சித்திரை – ஆனி 2015

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06

அமுதம் 15

துளி 2

# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

ப்ரதிஷ்டிதா ப்ரஜ்ஞா – நிலையான ஞானம் வேண்டுமானால் முதலில் அடைய வேண்டியது நிலையான ஒழுக்கம். பணமோ, பெயர்புகழோ, கல்வியறிவோ எதையும் சாதித்துவிடாது குணநலன் ஒன்றுதான் கடினச்சுவர்களையெல்லாம் பிளந்து கொண்டு போகவல்லது.



சுயநலமே ஒழுக்கக்கேடு சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணமாகும். ஆற்றல்களுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது ஒழுக்கமேயன்றி வேறு எதுவும் அன்று.

ஆயிரம் முறை இடறிவிழுவதன் மூலமே நற்பண்பை நிலை நிறுத்த வேண்டும். எந்தக் காலத்திலும் தைரியத்தை இழக்காதே. சாப்பிடும் போதும் உடுத்தும் போதும் படுக்கும் போதும் பாடும் போதும் விளையாடும் போதும் மகிழ்ச்சியிலும் நோயிலும் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கத்துடன் கூடிய தைரியத்தை உன்னிடமிருந்து வெளிப்படுத்து.

தூய்மையுடன் இரு தன்னலமற்று இரு - இதுவே மதம். என் அருமைக்குழந்தைகளே! சமய வாழ்வின் உட்பொருள் கொள்கைகளில் இல்லை, நடைமுறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நல்லதைச்செய்வது - இதில் தான் மதத்தின் முழுமையும் அடங்கியுள்ளது.

இளைஞர்களே! உங்களிடம் இப்போது நல்ல கனவுகள், நல்ல சிந்தனைகள் உருவாகட்டும்!! நீங்கள் நல்லவர்கள்!!!

தொகுப்பு: **சி. அபிராமி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# பிரார்த்தனை



அன்யச்ச்ரேயோ ன்யதுதைவ ப்ரேய:
தே உபே நானார்த்தே புருஷம் ஸினீத: |
தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாது பவதி
ஹீயதேர்த்தாத் ய உ ப்ரேயோ வ்ருணீதே ||

**பொருள்:** மேலானது வேறு, சுகம் தருவது வேறு. இவை இரண்டும் வேறுபட்ட பலன்களைத் தருகின்றன. இவ்விரண்டும் மனிதனை அணுகுகின்றன. மேலானதை (பேரின்பத்தை) ஏற்றுக்கொள்பவனுக்கு நன்மை உண்டாகின்றது. சுகம் தருவதை (சிற்றின்பத்தை) நாடுபவன் லட்சியத்திலிருந்து வீழ்கிறான்.

" மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசை செல்லும் கலம் போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர் வீடுபேறாக
சிமிழ் ஒன்று வைத்தமை தேர்ந்து அறியாரே"

*- திருமந்திரம் -*

**பொருள்:** சுகம் தரும் பெரும் செல்வமும் வீடு, வயல் போன்ற பிற சொத்துக்களும் ஆற்று வெள்ளத்தில் மிதக்கின்ற படகைப் போல் ஒரு நாள் கவிழ்ந்துவிடும். உலகியல் இன்பம் (சிற்றின்பம்) தரும் இச் செல்வங்கள் நிலையில்லாதவை. நிலையான பேரின்பத்தைப் பெறுவதற்கு எமது உடலின் ஆதார சக்தியாகிய தலைப் பகுதியில் சிமிழ் ஒன்று வைத்துள்ளதை பலரும் அறியாது உள்ளனர். அதனை அறிந்து அதன் பயனை உணர்ந்தால் அருளாகிய செல்வம் அமுத மழையாகப் பொழியும்.

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 15** **துளி 2**

# இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 01 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 03 |
| 3. | பிரார்த்தனை - கவிதை | 04 |
| 4. | பாப்பா பாப்பா கதை கேளு | 05 |
| 5. | உண்மைச் சம்பவம் | 08 |
| 6. | சாந்தோக்ய உபநிஷதம் | 11 |
| 7. | பஞ்சதந்திரக் கதை | 13 |
| 8. | யோகம் | 15 |
| 9. | உங்கள் கருத்து | 17 |
| 10. | படக்கதை | 18 |
| 11. | புண்ணிய நதிகள் | 20 |
| 12. | கலியுக கற்பகதரு | 22 |
| 13. | சாதனையாளர் | 24 |
| 14. | புராணச்சிறுவர் | 29 |
| 15. | மனிதன் எப்போது ஜொலிப்பான்? | 33 |
| 16. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 34 |
| 17. | செய்திகள் | 35 |


**அட்டைப் பக்கங்களில்...**


| | | |
|---|---|---|
| 1. | அட்டைப் படம் | |
| 2. | ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் | ii |
| 3. | படம் தரும் பாடம் | iii |
| 4. | உங்கள் சிந்தனைக்கு... | |

## இதழாசிரியர்களிடமிருந்து...


அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இந்த உலகம் வாய்ப்புக்களால் நிறைந்தது. அந்த வாய்ப்புக்கள் எமது வாழ்வை வெவ்வேறு பாதைகளில் அழைத்துச் செல்லக் கூடியன. நாம் தெரிவுசெய்யும் பாதைகளுக்கேற்ப எமது வாழ்க்கை அமைகிறது. இதனால்தான் சுவாமி விவேகானந்தர் 'நம் விதி நம் கையில்' என்று உறுதிபடக் கூறுகிறார். பாதைகளைத் தெரிவு செய்யும்போது நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனென்றால் பொதுவாக, அழகாகவும் இலகுவாகவும் தோன்றும் பாதைகள் எம்மை ஆபத்தான முடிவிடத்திற்குக் கொண்டு சேர்க்கின்றன. அதேவேளை எம்மை உன்னதமான நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய பாதைகள் ஆரம்பத்தில் கரடுமுரடாக, சிரமமாகத் தோன்றுகின்றன. பிரார்த்தனைப் பகுதியில் இடம்பெறும் 'அன்யச்ரேயோ...' என்ற சுலோகம் நல்ல பாதையைத் தெரிவு செய்வதற்கும் கெட்ட பாதையைத் தெரிவுசெய்வதற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது. இம்முறை எமது அட்டைப்படம் இக் கருத்தை வெளிப்படுத்தும் விதமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

சாதனையாளர் பகுதியில் வெளிவந்துள்ள 'ரூபா'வின் கதை எமக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. ரூபா தன் வாழ்வில் விபத்தைச் சந்தித்தபின் இருட்டிலேயே தன் எஞ்சிய வாழ்வைக் கழித்திருக்கலாம். அவமானத்துடன் மனம் வெதும்பியபடி பிறரைச் சார்ந்து தலைமறைவாகவே வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவள் அத்தகைய இலகுவான, இழிவான பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை. உலகை எதிர்கொண்டு சாதனையாளராகும் கடினமான ஆனால் உன்னதமான பாதையைத் தேர்ந்தெடுத்தாள்; வெற்றியும் கண்டாள்.

நாமும் இப் புத்தாண்டில் சரியான பாதையைத் தெரிவு செய்து உலகம் போற்றும் உன்னத நிலைக்குச் செல்ல வேண்டுமென உறுதிபூணுவோம். இதற்குத் துணைபுரியும் இவ் இதழை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

ஓஓஓ

# பிரார்த்தனை



அன்பினில் தோய்ந்த ஆனந்த முகத்தில்
ஆறாத இன்ப அருவி வருகுதே!
அருவியில் ஆழ்ந்திடும் தோறும் அகத்தில்
ஆறென இங்கு ஆனந்தம் தருகுதே!

உண்மையில் உள்ளதில் உற்ற சொந்தம்
உனக்காய் உள்ளத்தில் ஆசனம் கொண்டேன்!
உலகினையே உள்ளிழுத்துப் பற்றும் காந்தம்
உன்னழகை உள்ளே மாசறக் கண்டேன்!

உள்ளத்தில் ஒளியாய் நீவந்து அமர்ந்தாய்!
உள்ளது அனைத்திலும் நீ இங்கு ஒளிர்ந்தாய்!
உனக்கென அளித்திட ஒருபொருள் ஏது?
உருகியே அழைத்திட இருவிழி ஆறு!

அகிலமே எதிரினில் அறைகூவும் போதும்
அமைதியாய் உன்னைநான் அழைத்திட வேணும்!
அகிலங்கள் எனக்கென அமைந்திடும் போதும்
அருகினில் உன்னைநான் அடைந்திடல் காணும்!

ஆக்கம்: ச. துளக்சன், பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



## பாப்பா பாப்பா கதை கேளு

சிட்டுக்குருவி ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது. குருவியின் எதிரே கிளி பறந்து வந்தது. "குருவியே! சிட்டென எங்கே பறந்து செல்கிறாய்?" என்று கேட்டது கிளி. "கிளியே! என் நண்பன் குயிலைக் காண அவன் இல்லத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன்" என்றது குருவி.

### தப்புக்கணக்கு

"குருவியே! எனக்குப் பொழுது போகவில்லை. உன்னோடு நானும் வரலாமா?" என்று கேட்டது கிளி. "ம்; தாராளமாக வரலாம்! நான் ஒன்றும் தவறாக நினைக்கமாட்டேன். நாம் இருவருமே சேர்ந்தபடி குயிலின் இல்லத்திற்குச் செல்லலாம்"என்றது குருவி. உடனே குருவியும், கிளியும் குயில் தங்கியிருந்த தென்னைமரத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கின. தென்னைமரத்தில் அந்தநேரம் குயில் இல்லை. அது எங்கோ வெளியே சென்றுகொண்டிருந்தது. கிளியும், குருவியும் தென்னைமரத்திலேயே காத்துக் கொண்டிருந்தன.



நெடுநேரம் ஆகியும் குயில் வரவில்லை. "குருவியே! உன்னோடு நான் வந்த நேரம் சரியில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் குயிலை இன்னும் காணவில்லை" என்றது கிளி. "கிளியே அப்படி சொல்லாதே! நான் வரப்போவதாக ஏற்கனவே குயிலிடம் தெரியப்படுத்தினேன்! ஆனால் குயில்தான் என் பேச்சை மதிக்காமல் சென்றுவிட்டது என்று நினைக்கிறேன்" என்றது குருவி. "குருவியே! நம் பேச்சை மதிக்காத எந்த நண்பர்களோடும் நாம் நட்புவைத்துக் கொள்ளக்கூடாது. நம்மை

யார் மதிக்கின்றார்களோ அந்த நண்பர்களின் மீதே நட்புவைத்துக் கொள்ளவேண்டும்'' என்றது கிளி. "கிளியே! நீ சொல்வதும் உண்மைதான் என்று எனக்குத் தோன்றுகிறது. இனிமேல் நான் உனது கொள்கையையே கடைப்பிடிக்கிறேன். ஏதோ இந்தக் குயிலைப் பார்க்க நெடுந்தொலைவில் இருந்து புறப்பட்டு வந்துவிட்டோம். இன்னும் சிறிதுநேரம் இருந்துதான் பார்த்துவிட்டுச் செல்லலாமே! நாம் செல்லும் நேரத்தில் குயில் வந்துவிட்டால் என்ன செய்வது! நாம் இவ்வளவு தூரம் வந்ததே பயனற்றுப் போய்விடும்! எதற்கும் சிறிதுநேரம் பொறுத்திருந்து பார்க்கலாம்'' என்றது குருவி.

"ஓ தாராளமாகப் பொறுத்திருக்கலாம். எனக்கொன்றும் அவசர வேலையில்லை!. குருவியே! ஒருவருக்கு தாங்கமுடியாத செயல் எது தெரியுமா? இப்படி நண்பருக்காகக் காத்துக்கொண்டிருப்பதுதான். அவர் வருவாரா இல்லை வரமாட்டாரா? என்று காத்துக் காத்து வாழ்க்கையே வெறுத்துவிடும் நிலை ஏற்பட்டுவிடும்'' என்றது கிளி.

"கிளியே! நீ சொல்வது உண்மைதான்! என்ன செய்வது? இதனை அந்தக் குயில் புரிந்துகொள்ளவில்லை.



அதனால் தான் என்னை வரச்சொல்லிவிட்டு ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டது குருவி. அந்தநேரத்தில் குயிலானது வேகமாகத் தென்னைமரத்தை நோக்கிப் பறந்து வந்தது. அதன் அலகில் திராட்சைக் கொத்தினைக் கௌவிப் பிடித்திருந்தது. தென்னைமரத்தை வந்தடைந்ததும் திராட்சைக் கொத்தை குருவியின் முன்னே வைத்த குயில் "நண்பனே! வா! வா! உன்னோடு இன்னொருவரும் வருவார் என்று நினைத்தேன்! நான் எண்ணியது சரிதான்.

விருந்தினர்களாக வரும் உங்களுக்கு ஏதாவது தரவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அருகில் இருக்கும் திராட்சை தோட்டத்திலிருந்து இந்தத் திராட்சைக் கொத்தினை எடுத்துவந்தேன். திராட்சைக்கொத்தின் காம்புகள் மிகவும் வலுவா-கவிருந்ததால் அதனைப் பிய்த்து எடுத்துவரக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

முதலில் இந்த திராட்சைப் பழங்களைச் சாப்பிடுங்கள்! அப்புறமாக நாம் சௌகரியமாகப் பேசிக் கொள்ளலாம். கிளியாரே நீரும் எனக்கு நண்பர்தான். தயக்கம் இல்லாமல் இந்த திராட்சைப் பழங்களைச் சாப்பிடும்"என்றது குயில்.



குயிலின் அன்புள்ளத்தைக் கண்ட குருவியும், கிளியும் தங்கள் தவறை உணர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டன. சற்றுநேரத்திற்கு முன்னர் குயிலைப் பற்றிநாம் என்னவெல்லாம் பேசிக்கொண்டோம்! இந்தக் குயில் நம்மை உபசரிக்க வேண்டி திராட்சைப் பழங்களை எடுத்து வரச்சென்றிருந்ததை அறியாமல் நம் இஷ்டப்படியெல்லாம் தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டோமே! அது எவ்வளவு பெரியதவறு என்று இப்போதுதான் தெரிகிறது. இனிமேல் அவசரப்பட்டு யாரையும் தவறாக நினைத்துவிடக் கூடாது என்று தங்களுக்குள் முடிவுசெய்தன. குயில் கொடுத்த திராட்சையினை அன்போடு உண்டன.

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

உலக எந்திரத்தின் சக்கரங்களிலிருந்து விலகி ஓடாதீர்கள்! அதனுள்ளேயே நின்று செயலின் இரகசியத்தை அறிந்து கொள்ளுங்கள்! உள்ளிருந்த படியே சரியான முறையில் வேலை செய்தால் வெளியேறவும் முடியும்.

- சுவாமி விவேகானந்தர் -

## உண்மைச் சம்பவம்

"மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் இரத்தத்தைச் சிந்திப் பாதை அமைப்பவர்கள்தான் பெரியோர்கள் ஆவார்கள்" என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க அனையா (Anaiah) என்ற ஒன்பது வயதுச் சிறுமி தன்னுயிரைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாது, தனது பாசமிகு தங்கையைக் கோர விபத்தொன்றிலிருந்து காப்பாற்றுவதற்காகப் புரிந்த வீரச் செயல் இவ்விதழின் உண்மைச் சம்பவத்தை அலங்கரிக்கின்றது.




## அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

அமெரிக்காவில் மாடிசன் (Madison) என்ற நகரத்தில் தனது தாயுடனும் ஐந்து வயதான தனது தங்கை கம்ரியுடனும் (Camry) வசித்து வந்தாள் அனயா. 2011ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் நாள் அன்று வழமைபோல் புலர்ந்தது பொழுது. சகோதரிகள் இருவரும் தமது காலை உணவை முடித்துக்கொண்டு பாடசாலை செல்லத் தயாரானார்கள். பெருமழை பெய்து கொண்டிருந்ததால் இருவரும் மழைக் கவசத்தினை அணிந்த வண்ணம், தமது தாயிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு எதிரே இருக்கும் பாட-சாலைப் பேருந்து தரிப்பிடம் நோக்கி விரைந்தனர்.




அவர்கள் அணிந்திருந்த மழைக்கவசம் அவர்களின் பாதி முகத்தை மூடியிருந்தது. இதனால் அவர்களால் பக்கவாட்டில் எதையும் பார்க்கக்கூடியதாக இருக்கவில்லை. மழையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் அணிந்திருந்த மழைக்கவசமானது அவர்களின் உயிரின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

பாதையைக் கடக்க முற்பட்டவேளை அவர்களை நோக்கி வந்த கனரகவாகனத்தை அவர்களால் கவனிக்க முடியவில்லை. தங்களை நோக்கி வாகனம் ஒன்று நெருங்கி வருவதை அனயா உணர்ந்த நேரம் அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. எனினும் தன் தங்கையைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் துரிதமாகச் செயற்பட்டாள். தன்னுயிரைக்கூடப் பொருட்படுத்தாது தன் தங்கையைப் பாதையோரத்திற்குத் தள்ளிவிட்டு ஆபத்தைத் தானே எதிர்கொண்டாள் அனயா.


Camry & Anaiah Rucker




வேகமாக வந்த கன்ரக வாகனத்தில் மோதுண்டு சுயநினைவிழந்து கீழே விழுந்தாள் அனயா. சில நிமிடங்களுக்கு அவள் மூச்சிழந்து கிடந்தாள். அதிர்ஷ்டவசமாக அங்கே தூரத்தில் நின்றிருந்த பாடசாலைப் பேருந்துச் சாரதி ஒருவர் இந்தக் கோர விபத்தை நேரில் கண்டு அவளுக்கு உதவுவதற்காக அவளை நோக்கி ஓடிவந்தார். அவளைக் காப்பாற்றுமுகமாக முதலுதவி அளித்தார். தெய்வாதீனமாக அவள் மூச்சுவிடத் தொடங்கினாள்.



சகோதரிகள் இருவரையும் அவசரமாக வைத்தியசாலையை நோக்கிக் கொண்டு சென்றனர். கம்ரி (Camry) அபாயகரமான காயங்களிலிருந்து தப்பித்துக் கொண்டார் என வைத்தியர்கள் அறிவித்தனர். ஆனால் அனயாவிற்கு இரு கால்களும் உடைந்து, கழுத்திலும் முறிவு ஏற்பட்டிருந்தது. மேலும் அவளைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவளது மண்ணீரலும் ஒரு சிறுநீரகமும் பாதிப்படைந்திருப்பதாகக் கூறினர். சத்திரசிகிச்சை நிபுணர்கள் 10 மணித்தியாலங்களுக்கு மேலாகப் போராடி சுயநலமற்ற அந்தச் சிறுமியின் உயிரைக் காப்பாற்றினர். இறுதியில் அவர்களால் அனயாவின் வலது காலையும் கழுத்தையும் சரிப்படுத்த முடிந்தது.

ஆயினும் துரதிர்ஷ்டவசமாக நொருங்கிப் போயிருந்த அவளது இடது காலை அகற்றுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. அவள் முற்றுமுழுதாகக் குணமாவதற்காக ஒரு மாதத்திற்கு மேலாக வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்றுவந்தாள். சிகிச்சை முடிந்த பின் பாடசாலை நண்பர்கள் அயலவர்களின் உற்சாக வரவேற்புடன் வீடு திரும்பினாள்.



தன் வேதனையைச் சிறிதும் பொருட்படுத்தாது இச்சம்பவம் பற்றி அவள் கூறுகையில் "நான் எதையும் பெரிதாகச் சாதித்ததாக உணரவில்லை. இது என் கடமை. விபத்தை நான் எதிர்கொண்டிராவிட்டால் எனது தங்கை உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை. அது இதைவிட கொடூரமானதாக இருந்திருக்கும்" என்றாள்.



வீர விவேகானந்தரின்,

"என் மகனே! மரணம் நேருவதைத் தடுப்பதற்கில்லை என்றால், கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதைவிட வீரர்களைப் போல் இறப்பது மேலானது அல்லவா? நிலையில்லாத இந்த உலகிலே இரண்டொரு நாள் அதிகமாகவே வாழ்ந்து விடுவதனால் பெறப்போகின்ற பயன் என்ன? வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் குறிப்பாக மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்து போவது மிகவும் நல்லது."

என்ற வாக்கிற்கு ஒழுக நாமும் அந்த வீரச் சிறுமியைப் போன்றே எம்மால் முடிந்தளவிற்கு ஏனையவர்களுக்கு உதவி புரிவோமாக!

தொகுப்பு: **த. கௌரிஸ்வரி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# சாந்தோக்ய உபநிஷதம்

சென்ற இதழில் தைத்ரீய உபநிஷதத்தின் பிருகுவல்லீ மற்றும் ஆனந்தவல்லீ பற்றிப் பார்த்தோம். இவ்விதழில் சாந்தோக்ய உபநிஷதத்தின் மீது கவனத்தைச் செலுத்துவோம்.




இது சாம வேதத்தைச் சேர்ந்தது. 'சந்தஸ்' என்ற வார்த்தை வேதங்களையும் 'க' என்ற வார்த்தை பாடுபவரையும் குறிப்பதால் 'பாடுபவரின் உபநிஷதம்' என்று பொருள் படும்.

சாந்தோக்ய உபநிஷதத்தின் அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 154 பகுதிகளும் 628 மந்திரங்களும் உள. இவ் உபநிஷதத்தில் பல முக்கியமான வித்யைகள் போதிக்கப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை உலகியல் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கானவை என்பது ஆச்சரியமானதோர் உண்மை ஆகும்.

சாம மந்திரங்களை உத்கீதம், பிரஸ்தாவம் போன்ற பல்வேறு பகுதிகளாகப் பிரித்து அந்தப் பகுதிகளைப் பல்வேறு தேவதை களாகத் தியானிப்பது பற்றி முதற்பகுதி கூறுகிறது.

இரண்டாம் பகுதி முழுமையான சாம மந்திரங்களை அதாவது 5 அல்லது 7 பகுதிகள் கொண்ட சாம மந்திரங்களைத் தேவதை களாகத் தியானிப்பது பற்றிக் கூறுகிறது.



மூன்றாம் பகுதி மது வித்யை பற்றியும் அதனைச் செய்வதால் ஏற்படும் பலன்களைப் பற்றியும் கூறுகிறது. மது என்றால் தேன். மனிதர்கள் செய்யும் நல்வினைகள் அனைத்தின் பிரதிநிதியாகத் திகழ்கிறார் சூரிய பகவான். சூரிய தேவனைத் தேவர்களின் தேனாகக் கருதிச் செய்யப்படுகின்ற தியானமே மது வித்யை ஆகும்.

நான்காம் பகுதி ஸம்வர்க வித்யை பற்றியும் ஷோடசகலா வித்யை பற்றியும் உபகோசல வித்யை பற்றியும் கூறுகிறது. ஷோடசகலா வித்யையில் கூறப்படும் சத்யகாமனின் கதையை புராணச்சிறுவர்கள் என்ற பகுதியில் அறியக்கூடியதாய் இருக்கும்.

ஐந்தாம் பகுதியில் பிராண வித்யை அதாவது பிரபஞ்சத்தை இயக்குகின்ற சக்தியை வழிபடும் முறையினைப் பற்றியும் பஞ்சாக்னிகளான மழை, மேகம், பூமி, ஆண், பெண் போன்றவற்றை பற்றியும் வைஸ்வானர வித்யை பற்றியும் விளக்கப்படுகிறது.

ஆறாவது அத்தியாயமான தியானத்தின் விளைவான ஆன்ம அனுபூதி பற்றி கூறப்படுகிறது. உபநிஷதங்களின் உச்சக்கட்ட உபதேசமான அத்வைத அனுபவம் பற்றி விளக்கப்படுகிறது. அடிப்படையில் மனிதனும் இறைவனும் சைதன்யப் பொருளே என்று கூறுகின்ற மகாவாக்கியங்களில் ஒன்றான “தத்வமஸி” என்பது இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

ஏழாம் அத்தியாயம் பூம வித்யை பற்றி கூறுகிறது. பூம என்றால் மிகப்பெரியது என்று பொருள் படும். இறைவனை அனைத்திலும் பெரியவராகத் தியானிக்கின்ற வித்யை இது. இந்த வித்யையை சனத்குமாரர் நாரதருக்கு உபதேசித்தார்.

ஒரு தாயின் வயிற்றில் கருவாகிப் பிறந்து சில காலம் வாழ்ந்து மடிவது ஒரு ஆணின் அல்லது பெண்ணின் வாழ்க்கை எனப்படுகிறது. இதுதான் வாழ்க்கையா? இல்லை. மனித வாழ்க்கையில் நாம் சாதிப்பதற்காக நல்ல படிப்பு, நல்ல வேலை என்று பல இலட்சியங்கள் வேண்டும். ஆனால் இவை இடைநிலை இலட்சியங்கள் மட்டுமே.



(தொடர்ச்சி 14ம் பக்கம் ...)

# பஞ்சதந்திரக் கதை

காசி ஷேத்திரத்தில் ஓர் அந்தணச் சிறுவன் இருந்தான். அவன் ஒருநாள் தன் தாயிடம் சென்று, "நான் இங்கேயே சும்மாவிருந்தால் எப்படி? நான் தேசாந்தரம் செல்லலாம் என்று தீர்மானித்துவிட்டேன். விடை தாருங்கள்." என்று கேட்டான்.



"நீயோ சிறுவன். உன்னோடு யாரையாவது துணைக்கு அனுப்பி வைத்தால் தான் எனக்குத் திருப்தியாக இருக்கும். இங்கு யாரும் இல்லையே! ஆகையால் ஒன்று செய்கிறேன்" என்று சொல்லி ஒரு சிறு பானையை எடுத்து வந்தாள். அதில் பாதி அளவுக்கு மேல் தண்ணீர் ஊற்றி, அதில் ஒரு நண்டைப் பிடித்துப் போட்டுக் கொடுத்தாள். "இது உனக்குத் துணையாக இருக்கட்டும்." என்றாள்.

## அன்னையின் அறிவுரை

அதையே துணையாகக் கொண்டு அவன் நடக்கத் தொடங்கினான். வெகுதூரம் சென்ற பிறகு மாலை நெருங்கியது. அதன் பின் இரவும் வந்தது. அவனுக்குத் தூக்கம் வரவே, அந்தப் பானையைத் பக்கத்தில் வைத்துக் கொண்டு, அங்கே ஒரு மரத்தடியில் படுத்துக் கொண்டான். சீக்கிரத்தில் அங்கேயே தூங்கியும் விட்டான்.

அப்பொழுது பக்கத்திலிருந்த வயற்காட்டிலிருந்து ஒரு பாம்பு இரை தேடிக் கொண்டு வந்தது. வழியில் எதுவும் கிடைக்கவில்லை. பிறகு அப்பக்கமாக வந்ததும், அப்பானையில் உண்பதற்கு எதாவது இருக்கிறதா என்ற நம்பிக்கையில், தன் தலையை மெதுவாக உள்ளே விட்டது பாம்பு.

உள்ளே பசியோடு இருந்த நண்டு, வெடுக்கென தன் கொடுக்கால் அப்பாம்பைப் பிடித்து கொன்றது.



காலையில் விழித்தெழுந்த அந்த வேதியச் சிறுவன், இதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான். "ஆகா! நம் தாயின் யோசனைதான் என்னே! இப்படிச் சரியான துணையாக அனுப்பி வைத்தாரே!" என்று வியந்து போற்றினான்.

அதன்பின் அநேக மாதங்களுக்குப் பிறகு அவன் வீடு திரும்பினான். தன் தாயைப் பணிந்து நடந்ததைச் சொல்லி, "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை என்பார்களே, அது சரியாகிவிட்டது பார்த்தீர்களா!" என்று போற்றினான்.

**தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை**

தொகுப்பு: இ. ரிசிகா, தொண்டராசிரியை
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

*(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

வாழ்க்கைக்கென்று அறுதி இலட்சியம் ஒன்று வேண்டும். அது இறைவனை அடைதல்; இறையனுபூதி. மற்ற இலட்சியங்கள் நம்மை அறுதி இலட்சியத்திற்கு அழைத்துச் செல்வனவாக இருக்க வேண்டும் எனக்கூறி உபநிஷதம் முற்றுப்பெறுகிறது.

ஆக்கம்: **ஜெ.காயத்திரி**, தரம் 11,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# யோகம்


கடந்த இதழோடு யோகாசனத்தின் ஆரம்ப நிலைகள் முடிவு பெற்றன. அதாவது ஓட்டமும் துள்ளலும், உடலைத் தளர்த்தும் பயிற்சிகள், சூரிய நமஸ்காரம் போன்றவை. இந்த இதழிலிருந்து, ஆசனங்கள் ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். நாம் முன்பு கூறியது போன்று, ஆசனங்கள் செய்வதற்கு முன் கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற்கொண்டே பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

அவை மீண்டும் உங்கள் கவனத்திற்காக:

- உணவு உண்டபின் உடனே ஆசனங்கள் பயிலக்கூடாது. அதிக உணவுக்குப் பிறகு 4மணி நேரமும், சிற்றுண்டிக்குப் பிறகு 2மணி நேரமும் கழிந்த பிறகே பயில வேண்டும்.
- குளிப்பதற்கு முன்போ, பின்போ ஆசனங்கள் பயிலலாம். ஆனால் அரைமணி நேர இடைவெளி விடுவது நல்லது.
- ஆசனங்களையும், உடற்பயிற்சிகளையும் ஒன்று சேர்க்கக்கூடாது. உடலைத் தளர்த்தும் பயிற்சிகட்குப் பிறகு, போதுமான நேரஅளவு சவாசனம் செய்த பிறகே ஆசனங்களைத் தொடங்க வேண்டும்.
- ஆசனத்தின் பூரண நிலையில் உடலை ஓய்வு கொள்ளச் செய்து முறுக்கத்தைத் தளர்த்த வேண்டும். ஒரு ஆசனத்துக்கும் அடுத்த ஆசனத்துக்கும் இடையில் சில நிமிடங்கள் ஓய்வு எடுக்கவேண்டும்.
- எவ்வளவு நேரம் களைப்பின்றிப் பூரண நிலையில் நிற்கமுடியுமோ, அதைவிட அதிக நேரம் நிற்க முயலக்கூடாது. வளர்ச்சிக்குத் தகுந்த மாதிரி நேரத்தை அதிகரிக்கலாம்.
- ஆசனங்கள் செய்தபிறகு சாதகர் உடல் புத்துணர்ச்சியுடனும், சுகமாகவும் இருத்தல் வேண்டும். களைப்படைந்தோ, சக்தி இழந்தோ, வியர்த்தோ போகக்கூடாது.

**அர்த்தகட்டிச் சக்கராசனம்**

(பக்கவாட்டான வளைவு ஆசனம்)




செய்முறை:

1. நேராக நிற்கவேண்டும். பாதங்கள் இரண்டையும் நன்றாகச் சேர்த்து, உள்ளங்கைகள் தொடைகளுடன் சேர்ந்திருக்குமாறு வைத்து நிமிர்ந்து நிற்கவும்.

2. மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே வலது கையை மெதுவாக உயர்த்தவும். தோள் மட்டத்திற்குக் கையைக் கொண்டுவந்தவுடன் உள்ளங்கை மேல் நோக்கியவாறு திருப்பி, காதுமடலைத் தொடும்வரை உயர்த்தவும்.

3. இப்போது மூச்சை வெளிவிட்டவாறு இடதுபக்கம் மெதுவாகச் சாயவும். இதன்போது இடது உள்ளங்கை, இடது காலைத் தொட்டவாறு எவ்வளவு தூரம் போகமுடியுமோ, அவ்வளவு தூரம் வளைந்தால் போதுமானது. இப்போது சாதாரண சுவாசத்துடன் ஒரு நிமிடம் அப்படியே இருக்கவும்.

4. மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டு, இப்போது பழைய நிலைக்கு வரவும். கையை மெதுவாகக் கீழே இறக்கவும்.

இதேபோல் இடது கையைத் தூக்கி வலது பக்கமாகச் சாய்ந்து, அதேபோல் செய்ய வேண்டும்.

கவனிக்கவேண்டிய விடயங்கள்:

- உயர்த்தப்பட்ட கையை நேராக வைத்திருக்கவும். முழங்கையில் வளையக்கூடாது.
- முழங்கால் மூட்டுக்களும் மடியாமல் நேராக இருக்க வேண்டும்.
- இடுப்பின் உதவியுடன் பக்கவாட்டில் வளைய வேண்டும்.

பலன்கள்:

- முதுகெலும்புக்கு நல்ல பக்கவாட்ட வளைவைத் தருகிறது.
- வளையக்கூடிய தன்மையுடையதாக்கி முதுகுத்தண்டைப் பலமுள்ளதாகவும் ஆக்குகிறது.
- கல்லீரலின் செயற்பாட்டைச் சீர் செய்கிறது.

ஆக்கம்: **இ. பிரகலாதன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழின் 'படம் தரும் பாடம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.


## உங்கள் கருத்து





கதை: சி. அபிராமி


# உண்மைக் கல்வி?

படம்: ச. நிஷாலினி








ஏத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்ததை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தை வெளிப்படுத்துமோ



அத்தகைய கல்வியே இன்றைய தேவை. சமுதாயத்தில் உள்ள ஆண், பெண் அனைவருக்கும் உண்மைக் கல்வியை அளிப்பதே நமது கடமை!

–சுவாமி விவேகானந்தர்


# புண்ணிய நதிகள்



## கோதாவரி- பாகம் II

ஒருமுறை பிரம்மதேவன் யாவரும் விளங்கும் வண்ணம் ஒரு வேள்விக்கு ஏற்பாடு செய்தார். குறித்த நாளில் யாகபூமியான பிரயாகையில் யாகம் ஆரம்பிக்கப்பட இருந்தது.


குறிக்கப்பட்ட நேரத்தில் பிரம்மதேவன் யக்ஞவேதிக்கு அஸ்திவாரம் எடுப்பதற்காக நிலத்தைத் தோண்டினார். அப்படித் தோண்டிக்கொண்டுபோகும் பொழுது நிலத்தடியில் ஒருபெரும் பெட்டி இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். மற்றவர்களின் உதவியுடன் அவர் அப்பெட்டியை கவனத்துடன் வெளியே எடுத்தார். எல்லோரும் ஆவலுடன் பெட்டியைத் திறந்தனர். அங்கே ஒரு பேரழகு பொருந்திய பெண்ணொருத்தி அப்பெட்டியினுள் இருந்தாள். அங்குள்ள அனைவரும் அவள் அழகில் மயங்கினர். அவளைத் தமது மனைவியாக்க ஆசைப்பட்டனர். இதை உணர்ந்த பிரம்மா எல்லோரும் தான் கூறபோவதைக் கவனமாகக் கேட்கும்படி உத்தரவிட்டார். பின்பு அவர்களைப் பார்த்து நிலத்தில் புதைந்திருந்த பெட்டி என்னால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே பெட்டியும் அதனுள் கிடைத்த



பொருளும் எனக்குரியவை. இந்த அழகி என் மகள் ஆகின்றாள். இவளுக்கு உங்கள் எதிரிலேயே 'அகல்யா' என்று பெயர் சூட்டுகின்றேன். இவளை இங்குள்ள எந்த ஆண்மகனும் மணக்கலாம் ஆனால் ஒரு நிபந்தனை இப்பூவுலகை யாரொருவர் கால்களால் வலம் வந்து முதலில் சேருகின்றாரோ அவர்தான் இவள் கரம் பற்றலாம் என்று கூறினார். உடனேயே அனைவரும் உலகை வலம்வர நடக்கத் தொடங்கிவிட்டனர். இவர்களில் கௌதம மகரிஷியும் ஒருவர். சிறந்த தவயோகியாக இருந்தும் நீண்ட பிரயாணத்தை ஏற்கும் சக்தி அவரிடம் இல்லை.

எல்லோருக்கும் கடைசியாகவே சென்றுகொண்டு இருந்தார். அவர் இவ்வாறு செல்கையில் வழியில் ஒரு அதிசயக் காட்சியைக் கண்டார். அங்கு கருமைநிறம் கொண்ட காராம்பசு கன்று ஈனும் நிலைமையிலிருந்தது. உடனே அங்கு ஓடிச்சென்று அதை மும்முறைவலம் வந்து வணங்கவும் அப்பசு கன்றை ஈனவும் சரியாக இருந்தது. அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உடனே பிரம்மாவிடம் ஓடோடி வந்தார். தான் கண்ட சம்பவத்தைக் கூறினார். இப்பூவுலகை நான் ஒருதரமல்ல மூன்றுதரம் வலம் வந்துவிட்டேன் எனவே அப்பெண்ணைத் தனக்கே மணம் முடிக்கவேண்டும் என்று கௌதமர் கூறினார். ஆனால் நான்முகனோ அவர்கூறியதை நம்பவில்லை. அப்பொழுது "கன்று போட்டுக்கொண்டிருக்கும் காராம்பசுவை வலம்வருவது என்பது பூமியைப் பிரதட்சணம் செய்வதுபோல் ஆகும்" என்று அசரீரி ஒன்று கேட்டது.

அதன்பின் நான்முகன் தயக்கத்துடன் அந்தப்பெண் அகலிகையை, கௌதமருக்குத் தாரைவார்த்துக்கொடுத்தார். திருமணம் முடித்துப் பலநாட்கள் கழித்தே மற்றவர்கள் உலகைச் சுற்றிவந்தனர். விடயத்தை அறிந்ததும் ஏமாற்றமும் கோபமும் பொறாமையும் கொண்டனர். எல்லோரும் மனக்குமுறலுடன் சென்றனர். ஆனால் எஞ்சியிருந்த முனிவர்கள் கௌதமர் மீது வஞ்சம் கொண்டனர். இதனால் கௌதமர் கவலையுற்றார். பிரம்மதேவரிடம் தாமும் அகலிகையும் எங்கே தங்கலாம் என்று கேட்டார். அதற்குப் பிரம்மா சற்றுயோசித்துவிட்டு "கௌதமரே! பரமனே பெருமலையாகி என் பெயர் கொண்டு விளங்கும் பிரம்மகிரியே உங்களுக்கு ஏற்றது." என்று கூறினார். கௌதமரும் அவ்வாறே தமது தர்மபத்தினி அகலிகையோடு அங்கு குடியேறி இல்லறத்தைத் தொடங்கினார்.



(மிகுதி அடுத்த இதழில் தொடரும்.)




இளமைப் பருவம் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் மிக முக்கியமானது. இளமையில் விதைக்கப்படுகின்ற எண்ணங்களே அவனது மனப்பாங்கையும் வாழ்க்கையின் வெற்றியையும் நிர்ணயம் செய்கின்றன.

உலகின் குரு என விவேகானந்தரினால் விழிக்கப்படுகின்ற ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இளமைப்பருவம் குறித்தும், ஆன்மீக தாகம் குறித்தும் கடந்த இதழ்களில் தொடர்ச்சியாகப் பார்த்தோம். கதாதரரின் முயற்சியின் உண்மைத் தன்மையையும் தீவிரத்தையும் அவரது வாழ்க்கைச் சம்பவங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

தான் உயர் குடியில் பிறந்தவன் என்கின்ற கர்வத்தை விட்டொழிப்பதற்காக காளி கோவிலிலேயே துப்பரவு தொழிலாளியாக வேலை பார்த்த ரசிக் என்பவரின் மலசல கூடத்தை யாரும் அறியாமல் இரவு வேளையில் (பகல் வேளையில் யாரும் அறிந்தால் இவ் வேலையைச் செய்ய விடமாட்டார்கள் என்ற காரணத்தினால்..) சென்று கழுவி பின்பு தனது தலைமுடியைக் கொண்டு துடைத்து எடுத்தார். இதன் மூலம் உயர்குடியில் பிறந்தவன் என்ற எண்ணத்தைத் தன் மனதிலிருந்து அடியோடு களைந்தெடுத்தார்.

மேலும் கதாதரர் பணத்தின் மீது உள்ள ஆசையை விடுவதற்காக ஒரு கையில் சில நாணயங்களையும் இன்னொரு கையில் மண்ணையும் ஒன்றாக ஒப்பிட்டுப் பார்த்து பணமே மண், மண்ணே பணம் என திரும்பத் திரும்பக் கூறி கங்கையில் எறிந்தார். இச்சம்பவத்தின் பின்னர் அவரால் பணத்தைத் தீண்டக்கூட முடிவதில்லை. அவ்வாறு தவறுதலாக தீண்டினாலும் தேள் கொட்டியது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படலாயிற்று.

ஆன்மீக வாழ்க்கைக்குத் தடையாக இருக்கும் பொருட்களை மனத்தளவில் துறப்பதுடன் நின்றுவிடாமல் உடலும் புலன்களும் கூட அவற்றிலிருந்து விலகியிருக்கும்படி செய்தார் கதாதரர். பிற்காலத்தில் கதாதரர் குருதேவராக மாறிய பின்பு, அவரது முதன்மைச் சீடரான நரேந்திரர் (சுவாமி விவேகானந்தர்) உண்மையாகவே பணத்தினை

அவரால் தீண்டமுடியாதா என பரிசோதித்த சுவையான சம்பவமும் உண்டு. அதனைப் பிறிதொரு சம்பவத்தில் விரிவாகப் பார்ப்போம்.

அற்புத பக்தரான கதாதரரின் காளிதேவிக்கான பூஜை வழமையிலிருந்து மாறுபட்டதாகவும் பக்திபூர்வமாகவும் காணப்பட்டது. இதனை நாம் ஹிருதயரின் வார்த்தைகளிலேயே காண்போம்.

கதாதரர் பூஜை செய்வது ஒரு கண்கொள்ளாக் காட்சி. பார்ப்பவர்கள் அப்படியே தங்களை மறந்துவிடுவர். அவரது இதய ஊற்றிலிருந்து அந்த இன்குரல் பொங்கி வரும் போது தான் எத்தனை உருக்கம். ஒருமுறை கேட்டாலும் அதனை மறக்கவே முடியாது. அவர் பாடும் போது அவரது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழியும். பூஜை செய்யும் போது பிறர் அருகில் வருவதையோ பேசுவதையோ சிறிதும் அறியாத அளவிற்கு லயித்து விடுவார்.

மேலும் உள்ளம் ஒன்றி கதாதரர் பூஜை செய்யும் போது அவரது உடலில் ஒரு தெய்வீக ஒளி பிரகாசிப்பதைக் கண்ட மற்றப் பிராமணர்கள் ஒருவருக்கொருவர், இறைவனே மனித உருத்தாங்கி வந்து பூஜை செய்வது போல் அல்லவா உள்ளது என்று வியப்புடன் பேசிக் கொண்டதாக ஹிருதயர் கூறுகிறார்.

மேலும் கதாதரர் பிற்காலத்தில் தனது சீடர்களிடம் தன் பூஜை அனுபவங்கள் குறித்துக் கூறும் போது "பூஜை வேளைகளில் அங்க நியாசம், கர நியாசம் போன்ற சடங்குகளைச் செய்யும் போது மந்திரங்களின் எழுத்துக்கள் பிரகாசமான வண்ணங்களில் என் உடலில் ஒளிர்வதைக் கண்டேன். குண்டலினி சக்தி சுழுமுனை நாடி வழியாக ஒரு பாம்பைப் போல் சஹஸ்ராரத்திற்குச் செல்வதைப் பார்த்தேன். அந்தச் சக்தி கடந்து சென்ற உடலின் பகுதிகள் செயலற்று, உணர்ச்சியிழந்து உயிரற்றவை போலாகிவிட்டன. பூஜை வேளையில் 'ரம் இதி ஜல தாரயா வஹ்னீ ப்ராகாரம் விசிந்த்ய' என்று கூறிய போது, அதாவது ரம் என்ற பீஜ மந்திரத்தைக் கூறி நீரைத் தெளித்து, பூஜை செய்யும் பகுதியைச் சுற்றி அக்கினிச் சுவர் எழுப்பியிருப்பதாகக் கற்பனை செய்த போது, நூற்றுக்கணக்கான ஜுவாலைகளைக் கொண்ட ஓர் அக்கினிச் சுவர் எழும்பி அவ்விடத்தை எந்தவித ஆபத்தும் நேராவண்ணம் காப்பாற்றுவதைக் கண்கூடாகக் கண்டேன்".

*(தொடர்ச்சி 32ம் பக்கம் ...)*

**சாதனையாளர்**

அமிலத்தாக்குதலுக்குட்பட்டு உயிர் பிழைத்து, அதனால் துவண்டுவிடாது வாழ்வில் சாதித்த ஒருபெண் தான் ரூபா.

ரூபா இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். தற்போது இவருக்கு வயது 22. 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தான் இந்தக் கோர விபத்து நிகழ்ந்தது. அதிலும் ரூபாவின் மாற்றாந்தாயே விபத்திற்குக் காரணமானவர் என்பது அதிர்ச்சிக்குரிய விடயம்.

## அகத்தின் ஆற்றல் வெளிப்படுவதே அழகு

ஒருநாள் வழமைபோல் ரூபா நித்திரையில் ஆழ்ந்திருக்கையில் அவரது மாற்றாந்தாய் அவர் மேல் அமிலத்தை ஊற்றிவிட்டார். ரூபா பிழைத்துவிடக் கூடாதென்ற எண்ணத்தில் அவருக்கருகில் இருந்த தண்ணீர்க் குவளையைக் கூட முன்கூட்டியே அகற்றியிருந்தார். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ரூபாவிற்கு எந்தவித முதலுதவியினையோ, சிகிச்சையினையோ செய்யவில்லை அவரது மாற்றாந்தாய்.



சம்பவம் நிகழ்ந்து 6 மணித்தியாலங்களின் பின்னரே ரூபாவின் மாமனார் வந்து சேர்ந்தார். அதுவரை ரூபா வேதனையிலும் வலியிலுமே துடித்துக் கொண்டிருந்தார். ரூபாவை அவரது மாமனார் அருகிலிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். உள்ளூர் மருத்துவமனையிலே தேவைப்பட்ட சிகிச்சைகளை வழங்குவதற்குப் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் ரூபா புதுடெல்லியிலுள்ள சவ்தார்ஜங் மருத்துவமனைக்கு (Safdarjung Hospital) மாற்றப்பட்டார். தொடர்ந்து மூன்று மாதங்கள் அவ்வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்றார். அங்கே 7 சத்திரசிகிச்சைகளுக்கு முகங்கொடுத்திருந்தார். சுமார் 9 இலட்ச இந்திய ரூபாய்கள் அவரது சிகிச்சைக்காக செலவிடப்பட்டிருந்தது. சிகிச்சையின் பின் ரூபா பரிடாபாத்தில் (Faridabad) தன் மாமனுடனேயே வசித்தார்.

ரூபாவின் மாமா ஒரு சிகை திருத்தும் கடை வைத்திருந்தார். ஆதலால் அவரிடம் ரூபாவிற்கு மேலும் உதவிகள் செய்யும் அளவிற்கு வசதியிருக்கவில்லை. சிகிச்சைகளுக்குப் பணம் செலவிடப்பட்டதில் அவரது கடன் சுமை இன்னும் அதிகரித்திருந்தது. எனவே ரூபாவை அவரது சொந்த ஊருக்கு அனுப்பிவைக்க நினைத்தார். எனினும் ரூபாவிற்கு இரக்கமற்ற தன் பெற்றோரிடம் திரும்பிச்செல்ல மனமில்லை. செல்ல மறுத்துவிட்டார். அவர்களுக்கு அரசாங்கத்தால் எந்த உதவியும் கிடைக்கப்பெறவில்லை. அமிலத்தாக்குதலுக்கு உட்பட்டவர்களுக்கு எவ்வித பொருளாதார சலுகையும் வழங்கப்படவில்லை.

ரூபாவின் உயிரை அவரது மாமனார் காப்பாற்றிவிட்டாலும் அவளது வாழ்க்கை போராட்டமாகவே இருந்தது. அமிலத்தாக்குதலின் பின்விளைவுகள் அவளை மிரள வைத்தன. இறப்பை விட அவளுக்கு வாழ்வது கொடுமையாகத் தோன்றியது. தினமும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. வெளியே செல்வது கூட அவளுக்குத் துன்பத்தைத் தந்தது. நண்பர்கள், உறவினர்கள் விலகிச் சென்றனர். காண்பவர்கள் பயத்துடனும், அருவருப்புடனும் அருகில் வர மறுத்து அவளை ஒதுக்கினர். ரூபாவின் மாற்றாந்தாயின் வஞ்சக வேலையால் ரூபாவின் எதிர்காலம் கேள்விக்குறியானது. ஆனால் குற்றம் செய்தவரோ சில மாதங்களிலேயே காவலில் இருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக வாழத் தொடங்கினார்.




ரூபாவுக்கும் தான் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற ஆசை அவளைச் செயற்பட வைத்தது. தனது கனவுகள், இலட்சியங்களை நிறைவேற்ற எண்ணினார். யாருக்கும் சுமையாகவோ, யாரிலும் சார்ந்திருக்கவோ அவள் விரும்பவில்லை. ஒரு தொழிற்கல்வியில் தேர்ச்சி பெற்றால் சுதந்திரமாக வாழலாம் என்று சிந்தித்தாள். அவ்வேளையில் 'அமிலத் தாக்குதலை நிறுத்து' (Stop Acid Attacks) என்ற இயக்கத்தின் தொடர்பு அவளுக்குக் கிடைத்தது.

அதன் மூலம் அமிலத் தாக்குதலுக்குட்பட்ட மற்றும் சிலரின் தொடர்பு அவளுக்குக் கிடைத்தது. புதிதாக நண்பர்களைச் சேர்த்துக் கொண்டாள். அங்கு செல்லும் வேளைகளில் மருத்துவ உதவிகளோடு ஆடல் பாடல் என மகிழ்ச்சியாகக் காணப்பட்டாள்.



பல ஆண்டுகளாக முகத்தை மறைத்து வாழ்ந்து வந்த ரூபா துணிவுடன் ஆடை அலங்கார வடிவமைப்புக்கான ஒரு படப்பிடிப்பில் காட்சி கொடுத்துள்ளார். இதில் இவரோடு பங்குபற்றிய ஏனையோர் இவரது நண்பர்கள். அதாவது அமிலத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள். இங்கு மிக முக்கியமான விடயம் என்னவெனில் இவர்கள் அனைவரும் அணிந்திருந்தது ரூபா வடிவமைத்த நாகரீக ஆடைகளாகும். ரூபா, ரீடா, சோனம், லக்ஷ்மி மற்றும் சஞ்சல் ஆகிய ஐவரும் ரூபா வடிவமைப்பு (Rupa Designs) என்ற பெயரில் ரூபா வடிவமைத்த ஆடைகளை அணிந்து படப்பிடிப்பில் பங்குபற்றினர். இவர்களைப் படம் பிடித்திருந்தார் டெல்லியைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் ராகுல் சஹரன். (Rahul Saharan)



"வடிவமைப்பாளராக வரவேண்டும் என்பது என் ஆசை. ஆனால் விபத்தினால் என் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு பெரிய இடைவெளி வந்துவிட்டது. விபத்தில் உண்டான வடுக்கள் எனக்குச் சங்கடத்தையும், பயத்தையும், பாதுகாப்பற்ற தன்மையையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்தியிருந்தது. சால்வையால் முகத்தை மறைத்தபடி இருந்தேன். நான் என் இலட்சியத்தை மனதிலிருந்து அகற்றவில்லை. அதை எண்ணியபடியே இருந்தேன். எனினும் எனது கனவு குறுகிய காலத்தில் நனவாகும் என நான் எதிர்பார்க்கவில்லை. எனது பெயரில் வடிவமைப்புகளை வெளியிடுவது இலகுவாக இருக்குமென நினைக்கவில்லை" என் மகிழ்வுடனும், திருப்தியுடனும் கூறுகிறார் ரூபா.

ரூபா விபத்து தன் கனவுகளையோ, இலட்சியத்தையோ, வாழ்க்கையையோ தரைமட்டமாக்க இடமளிக்கவில்லை. தான் எதற்காக முகத்தை மறைத்து ஒரு கஷ்டமான வாழ்வை வாழ வேண்டும். தான் எந்தத் தவறும் செய்யவில்லை. பின்பு எதற்காக மறைவாக இருக்க வேண்டும்? என நினைத்த ரூபா ஒரு கௌரவமான நிலையில் இருப்பதற்கு விரும்பி தற்போது படப்பிடிப்பில் பங்குகொள்கிறார். விபத்துச் சம்பவத்திலே தன் மாற்றாந்தாய்க்கு ஆதரவாக இருந்த காரணத்தால் தனது தந்தையாரையும் ஒதுக்கிவிட்டார். அவரது பெயரையும் தன் பெயரிலிருந்து விலக்கி விட்டார்.



"அமிலத் தாக்குதல்களை நிறுத்து" (Stop Acid Attacks) என்ற இயக்கம் பாதிக்கப்பட்டவர்களைக் கைகொடுத்து உயர்த்துவதில் முன்னின்று இயங்குகின்றது. அவர்கள் "சாஓன்" (Chaaon) என்ற உதவி ஸ்தாபனத்தையும், அமிலத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிறுவியுள்ளது.

"சாஓன் எனக்கு தன்னம்பிக்கையையும் உறுதியையும் தந்துள்ளது. தையல் மற்றும் ஆடை வடிவமைப்பில் எனக்கு ஆர்வம் அதிகம். என் திறமையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் அமைந்துள்ளது. என் படைப்புகள் பலரது பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெறுகையில் மகிழ்ச்சியாக உள்ளது" என்று கூறுகிறார் ரூபா.




ரூபா ஏற்கனவே மூன்று வடிவமைப்புகளை அமெரிக்க சுற்றுலாப்பயணி ஒருவருக்கு வழங்கியுள்ளார். மேலும் இந்தியாவின் பிரபல பெண் தொழிலதிபர் ஒருவரிடமிருந்து பாரம்பரிய உடைகளுக்கான உத்தரவு கிடைத்துள்ளது.

"மேலும் பல கேள்விகள், ஒப்பந்தங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளது. கடந்த ஆறு வருடங்களாக நான் ஏராளமான தடைகளையும் கஷ்டங்களையும் கடந்து வந்துள்ளேன். சொந்தமாக ஒரு நாகரீக உடை வடிவமைப்பு மற்றும் விற்பனை நிலையத்தைத் தொடங்குவதே இப்போது எனது ஆசை. இதனால் நான் யாரிலும் தங்கியிருக்க வேண்டியதில்லை. எனது கனவுகள் நனவாகும் என நான் நினைத்ததில்லை. ஆனால் இப்போது எதையும் சாதிக்க முடியும், முயற்சியால் எல்லாம் சாத்தியமே என்ற நம்பிக்கை வந்துள்ளது" என்று நம்பிக்கையோடு கூறுகிறார் ரூபா.



சுவாமி விவேகானந்தர், "எல்லா ஆற்றல்களும் உங்களுக்குள் இருக்கிறது. உங்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை நம்புங்கள். நீங்கள் பலவீனர்கள் என்று எண்ணாதீர்கள். 'நான் தாழ்ந்தவன், நான் பலவீனன்' என்று நினைப்பதையே பாவம் என்றும் அறியாமை என்றும் நான் கொள்கிறேன். எழுந்திருங்கள், விழித்திருங்கள். இனியும் உறங்காதீர்கள். எல்லாத் தேவைகளையும் துன்பங்களையும் தீர்க்கும் ஆற்றல் உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. இதை நம்புங்கள், அந்த ஆற்றல் வெளிப்படும்" என்று கூறுகிறார்.

அதன்படி தன்னம்பிக்கையுடனும், மன உறுதியுடனும் முயற்சி செய்து வாழ்வில் ஏற்பட்ட தடைகளைக் கடந்து இன்று சாதனைப் பெண்ணாக வலம் வருகிறார் ரூபா.

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

'கோழையும் முட்டாளுமே விதி என்பான்.' என்கிறது சமஸ்கிருதப் பழமொழி ஒன்று. ஆற்றல் மிக்கவனோ, 'என் விதியை நானே வகுப்பேன்' என்று கூறுவான். முதுமையை நெருங்குபவர்களே விதியைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் பொதுவாக ஜோதிடத்தை நாடுவதில்லை.

**-சுவாமி விவேகானந்தர்-**

புராணச்சிறுவர் என்ற பகுதியிலே இம்முறை நாம் சாந்தோக்ய உபநிடதத்தில் ஷோடசகலாவித்யை என்ற பகுதியிலே இடம்பெறும் சத்தியகாமன் என்ற சிறுவனைப் பற்றி நோக்கலாம்.

## புராணச்சிறுவர்

அவனது தாயார் ஜாபாலை. ஜாபாலனிற்கு தனது சகவயதுச் சிறுவர்கள் குருகுலத்தில் இணைந்து கல்வி கற்பதைக் கண்டுதானும் குருகுலத்தில் இணைந்து கல்வி கற்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அதைத் தன் தாயிடம் தெரிவித்து அனுமதி பெற்று, குருகுலம் சென்றான். அங்கே அவன் குருகுலத்தில் இணையவேண்டுமானால் தனது தாய் தந்தை பரம்பரை போன்றவிடயங்கள் பற்றிக் குருவிற்குத் தெரிவிக்கவேண்டியதைப் பற்றி அறிந்து மீண்டும் வீடு திரும்பினான்.

## சத்தியகாமன்

ஜாபாபலன் தன் தாயிடம் "தாயே! நான் குருகுலத்தில் இணைய வேண்டுமானால் எனது தாய் தந்தை பரம்பரை போன்ற விடயங்கள் பற்றிக் குருவிற்குத் தெரிவிக்கவேண்டும். தாயே நான் எந்தப் பரம்பரையைச் சேர்ந்தவன்?" என வினவினான். அதற்கு அவனது தாய் "மகனே! நான் வீட்டுவேலைகள் போன்ற பல வேலைகளில் என் இளமைக் காலத்தைக் களித்தேன். அதற்கிடையில் உன்னையும் பெற்றெடுத்தேன். இந்த நிலையில் உனது பரம்பரை பற்றி நான் அறியேன். ஆனால் என் பெயர் ஜாபாலை. உன் பெயர் ஜாபாலன். எனவே உன் குரு கேட்டால் இவ்வாறே உரைப்பாய்" என்று பதிலுரைத்தாள்.



தாயிடம் விடைபெற்ற ஜாபாலன் குருவிடம் சென்றுதான் குருகுலத்தில் இணைய விரும்புவதைத் தெரிவித்தான். அதற்கு குரு "பாலகனே நீ எந்தப் பரம்பரையைச் சேர்ந்தவன் என்று வினாவ, அதற்கு ஜாபாலன் தனதுதாய் கூறியதை அவ்வாறே குருவிற்குத் தெரிவித்தான்.

ஜாபாலன் கூறியதைக்கேட்ட குரு "மகனே உயர் குலத்தில் அல்லாத ஒருவன் இவ்வாறு உண்மையை உரைப்பதற்குத் துணியமாட்டான். எனவே நீ உயர் குலத்தைச் சேர்ந்தவன். ஆகவே நான் உன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்கிறேன்" எனக் கூறி ஜாபாலனை ஆசீர்வதித்தார். அவன் குருவிடம் உண்மையே உரைத்ததால் சத்தியகாமன் ஜாபாலா என்று அழைக்கப்பட்டான்.



தகுதி வாய்ந்த குரு தாம் ஏற்றுக்கொண்ட சீடன் தயாராக இருக்கிறானா என்பதை அறிய பல்வேறு சோதனைகள் செய்வதுண்டு. அந்தவகையில் அவன் குருகுலத்தில் இருந்தபோது அவனது குரு சத்தியகாமனிடம் சில பசுக்களை ஒப்படைத்து அவற்றை ஆயிரம் பசுக்களாகப் பெருகச் செய்து வா என ஆணையிட்டார்.

குருவின் ஆணையை ஏற்று பசுக்களுடன் காடு சென்றான் சத்தியகாமன். காட்டில் அவன் வெறுமனே மாடுகளை மேய்ப்பதுடன் நின்றுவிடவில்லை. குரு ஆணையிட்டிருப்பதால் மாடுகளைமேய்ப்பதை ஓர் ஆன்மீக சாதனையாகக் கண்டான். கூடவே காட்டில் தவவாழ்வு இயல்பானதாக இருந்தது. தவமும் நம்பிக்கையும் அவனை ஆன்மீகத்தில் உயரச்செய்தன. இறுதியில் இயற்கையே அவனுக்குப் போதிக்கத் தொடங்கியது.

கிழக்குத்திசை ஒருபங்கு மேற்குத்திசை ஒருபங்கு தெற்குத்திசை ஒருபங்கு வடக்குத்திசை ஒருபங்கு. இந்த நான்கு பங்குகளும் சேர்ந்தே இறைவன் நான்கில் ஒருபகுதி. இந்நிலையில் அவர் ஒளிர்பவர் எனப் பெயர் பெறுகிறார்" என காளை சத்தியகாமனிற்குப் போதித்தது. இறைவனின் அடுத்த நான்கில் ஒரு பகுதியை அக்கினி உபதேசித்தது. பூமி ஒருபங்கு இடைவெளி ஒருபங்கு வானம் ஒருபங்கு கடல் ஒருபங்கு.



இந்த நான்கு பங்குகளும் சேர்ந்தே இறைவனின் ஒருபகுதி அமைகிறது. இந்நிலையில் இறைவன் "எல்லையற்றவர்" எனப் பெயர்பெறுகிறார்.

அடுத்த நான்கில் ஒருபகுதியை அன்னப்பறவை தொடர்ந்தது. அக்கினி ஒருபங்கு சூரியன் ஒருபங்கு சந்திரன் ஒருபங்கு மின்னல் ஒருபங்கு. இந்நான்கு பங்குகள் சேர்ந்தே இறைவனின் ஒருபகுதி அமைகிறது. இந்நிலையில் அவர் "ஒளிவடிவினர்"எனப் பெயர் பெறுகிறார்.

இறைவனின் இறுதி நான்கில் ஒருபகுதியை நீர்ப்பறவை உபதேசித்தது. பிராணன் ஒருபங்கு கண் ஒருபங்கு காது ஒருபங்கு மனம் ஒருபங்கு. இந்நான்கு பங்குகளும் இணைந்தே இறுதிப்பகுதி அமைகிறது. இந்நிலையில் இறைவன் "இருப்பிடம் உடையவர்" எனப் பெயர் பெறுகிறார். இவ்வாறு சத்தியகாமனிற்கு இயற்கையே பல உண்மைகளை உணர்த்தியது. இந்தக் காலப்பகுதியில் பசுக்களும் பெருக்கம் அடைந்தன. அவற்றுடன் குருவிடம் திரும்பினான் சத்தியகாமன். அப்போது குரு சத்தியகாமனை ஒரு ஞானியாகக் கண்டு ஆசீர்வதித்தார்.

ஒருவன் இயற்கையிலிருந்தும் நூல்களிலிருந்தும் ஆன்மீக அறிவைப் பெறமுடியும். ஆனால் அது முழுமையான அனுபவமாக, மிகமேலான நன்மை தருவதாக இருக்க இயலாது. புறத்திலிருந்து பெறுகின்ற ஆன்மீக அறிவை ஒரு ஆற்றல் மிக்க குருவினால் மட்டுமே மிகமேலான நன்மை தருகின்ற அனுபவமாக மலரச் செய்ய இயலும் கௌதமர் சத்தியகாமனை நோக்கி, "இனியவனே, இறைஞானம் பெற்றவனைப் போல் நீ ஒளிர்கிறாய். இவற்றையெல்லாம் உனக்கு யார் உபதேசித்தார்? என்று கேட்டார்.



ஷோடசகலா வித்யை உபதேசத்தைக் காளை தொடங்கியது.

அதற்கு சத்தியகாமன், "மனிதர்களைத் தவிர மற்றவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். ஆனால் எனக்கு தேவரீர் உபதேசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று உறுதியுடன் கூறினான்.

இறைஞானத்தைப் பெறுவதில் குருவின் பங்குமகத்தானது. எனவே இயற்கையிலிருந்து உபதேசம் பெற்ற பின்னரும் சத்தியகாமன் குருவை நாடி அவர் வாயிலாகவே முழு ஞானத்தையும் பெற்றான்.

ஆக்கம்: கு. சனாதனி, உயர்தரம்
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு கதாதரரின் பூஜை அனுபவங்கள் அமைந்திருந்தாலும் அவரின் நியமங்களிலிருந்து மாறுபட்ட பூஜை முறையை அனைவரும் கேலி செய்தனர். சிலர் கடுமையாக விமர்சித்தனர். மேலும் சிலர் கோவில் தர்மகர்த்தாவான மதுர்பாபுவிடம் கதாதரரின் பூஜை முறை குறித்து முறைப்பாடும் செய்தனர்.

கோவிலுக்குள் மற்றவர்களுடைய கேலிப்பேச்சையோ மதுர்பாபுவிடம் முறைப்பாடு செய்தால் தன்னுடைய பூஜை வேலை பறிபோய்விடுமோ என்ற எண்ணம் கதாதரருக்குச் சிறிதுமில்லை. அன்னை காளியின் மீதான பக்தியே அவர் உள்ளம் முழுதும் நிரம்பியிருந்தது.


ஆனாலும் புதிய பூஜாரியின் விநோதமான பூஜை முறையைக் குறித்த முறைப்பாட்டின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ள மதுர்பாபு யாரிடமும் தெரிவிக்காமல் ஒருநாள் தட்சிணேஸ்வரம் வந்தார்.

(தொடரும்...)


ஆக்கம்: உ. சசிதரன், பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

# மனிதன் எப்போது ஜொலிப்பான்?

மாணவர்களே! பறக்கும் போது தான் மின்மினிப்பூச்சிகள் ஜொலிக்கின்றன, உழைக்கும் போது தான் மனிதன் ஜொலிக்கிறான். உழைப்பைத் தள்ளிவிட்டு யாராலும் உயர முடியாது. ஆகவே, வெளுக்கத் துடிக்கும் கிழக்கைப் போல நாங்கள் உழைக்கத் துடிக்க வேண்டும். மறந்தும் சோர்வுக்கும், தள்ளிப்போடும் எண்ணத்திற்கும் இடம் தரக்கூடாது. ஏனெனில் நாங்கள் தள்ளிப்போடுவது எமது பணிகளை மட்டுமல்ல வெற்றிகளையும் தான்.



மேலும் வெற்றி என்பது பணிகளைத் தொடங்குவதில் மட்டுமல்ல அப்பணிகளை உரிய நேரத்தில் உரிய முறையில் முழுமையாக முடிப்பதில் தான் உள்ளது. ஆகவே, முறையான தொடக்கமும் முழுமையான நிறைவும் தான் எங்களுடைய பணி-களைச் சிறப்பு மிக்கதாக்கி, வெற்றியைப் பெற்றுத்தரும். ஒவ்வொருவர்களுக்குள்ளும் பல ஆற்றல்கள் மறைந்து காணப்படுகின்றன. அந்த ஆற்றல்களை இனங்காண எங்களுக்குள்ளாகவே ஒரு தேடுதல் வேட்டையை ஆரம்பிப்போமாக.



எமது ஆற்றல்கள் எம்மை ஒரு சாதனையாளராக மாற்றும். இப்படி ஒரு சாதனையாளராக நாம் மாறுகையில் பிறரின் பாராட்டும் ஊக்குவிப்பும் எமக்குக் கிடைக்கும். எமக்கென்று சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கும் போது எமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் முயற்சிகள் இயல்பாகவே அதிகரிக்கும்.



கல்லுக்குள் மறைந்துள்ள சிற்பத்தை மனக்கண்ணால்



கண்டு உளி கொண்டு கல்லின் தேவையற்ற பாகங்களை நீக்கிவிட்டு அழகிய சிற்பத்தை வடிக்கும் சிற்பியைப் போல நாமும் எமது முயற்சியைப் பயன்படுத்தி ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சாதனையாளராக மாறுவோம். சோர்வு, தள்ளிப்போடும் எண்ணம் என்பவற்றை அறவே எம்மிடமிருந்து நீக்குவோம்.

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. 'நான் எதையும் சாதிக்கவல்லவன்' என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகிவிடும்.

- சுவாமி விவேகானந்தர்-


ஆக்கம்: ச. சாம்பவி, உயர்தரம்
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வா | ல் | 2 மீ | 3 கி | ■ | 4 சா |
| ம | ■ | 5 னா | த | ந் | து |
| தே 6 | ட | ட் | ம் | ■ | ■ |
| வ | ■ | 7 சி | ர | த் | 8 தை |
| ன் 9 | ஊ 10 | ■ | ந் | ■ | ம |
| ■ | ழி 11 | ஆ | ■ | தி 12 | ம |

# செய்திகள்


25.01.2015 அன்று எமது ஞாயிறு சமய பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இடம்பெற்றெது. அன்றைய தினம் சமய அறிவு, வேதபாடம், மனனம், பேச்சு,யோகாசனம் ஆகிய பாடங்களில் தமது திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்திய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு. W.M.ஜயந்த விக்கிரமநாயக, வலயக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததோடு அறநெறி அமுதத்தின் 15 ஆவது அமுதத்தின் 1 ஆவது துளியையும் வெளியிட்டு வைத்தார்.







17.02.2015 அன்று எமது ஆசிரமத்தில் மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றையதினம் நான்கு யாமப் பூஜை, பஜனை, ஆகியவற்றைத் தொடர்ந்து ஹோமம் இடம்பெற்றது. சிவனடியார்கள் இரவு முழுவதும் விழித்திருந்து சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்தார்கள்.





கலியுகக் கற்பகதருவாம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 180 ஆவது ஜெயந்தி தினம் 20.02.2015 அன்று எமது ஆசிரமத்தில் பஜனை, விஷ்ணு சகஸ்ர நாமம், அமுதமொழிகள் வாசிப்பு, ஹோமம் என்பவற்றோடு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. 01.03.2015 அன்று எமது சமய பாடசாலை மாணவர்களால் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் -





படத்தைத் தாங்கி அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு மங்கள வாத்தியங்களின் முழக்கத்தோடும் குருதேவரின் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளோடும் எடுத்துச் செல்லப்பட்டது.



அன்றைய தினம் நான்கு மதங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மலேசியா , இராமகிருஷ்ண மிஷன் தலைவர்- ஸ்ரீமத் சுவாமி சுப்ரியானந்தஜி மகராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

---



குருதேவரின் நேரடிச்சீடர்களான சுவாமி அற்புதானந்தர், சுவாமி யோகானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினங்கள் முறையே 03.02.2015, 10.03.2015 ஆகிய தினங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.



---

நாம சங்கீர்த்தனத்தின் மகிமையை மக்களுக்கு உணர்த்திய சைத்தன்ய மகாபிரபுவின் ஜெயந்தி தினம் 05.03.2015 அன்று எமது ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



---



28.03.2015 அன்று ஸ்ரீ இராமபிரானின் பிறந்த தினமாகிய இராமநவமி தினம் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. 23.03.2015 அன்று எமது சமய பாடசாலை மாணவர்களால் பஜனை, நடனம், உரையாடல் ஆகிய கலை நிகழ்ச்சிகளுடன் இராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொகுப்பு: **பா. ஜெனனி,** பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

கடந்த இதழில் **'உங்கள் கருத்து'** எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு எமது இராமகிருஷ்ண மிஷன் சமயப் பாடசாலையைச் சேர்ந்த தரம் 7 மாணவி ரா. நிரூஷா எழுதிய கருத்து...





இப்படத்தில் ஒரு வாயில்லா ஜீவன் பாதையோரம் இருக்கும் சிறு கோயிலில் உள்ள கடவுள் சிலையை வணங்குவதைக் காணலாம்.


எமது இன்றைய நவீன சமுதாயத்தில் இறைவனைப் பற்றிய சிந்தனை பெரும்பாலானோரில் குறைவடைந்து செல்கிறது. பல பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனாக, இறைவனால் கொடுக்கப்பட்ட இம்மனிதப் பிறவியின் நோக்கத்தை பகுத்தறிவுள்ள மனிதன் மறந்துவிட்டான். ஆனால் ஐந்தறிவுள்ள ஜீவனோ வழியில் செல்லும் போது ஒரு கணம் நின்று இறைவனைத் தன் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி வழிபட்டுச் செல்கின்றது.

# உங்கள் சிந்தனைக்கு...

சத்தியத்தாலும் அஹிம்சையாலும் பெரும் புகழ் பெற்ற அண்ணல் மகாத்மா காந்தியடிகள் பொதுவாழ்வில் ஈடுபட்ட ஆரம்ப காலம். ஒரு நாள் தனது நண்பர் ஒருவரின் காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது, அவரைப் பிடிக்காத சிலர் மறைவாக நின்று அந்த கார் மீது கற்களை வீசினர். உடனே காந்தியடிகள் வண்டியை நிறுத்தி, அதிலிருந்து இறங்கி கல் வீசிய இடத்திற்கு சென்றார். அவர்களை நோக்கி, "உங்களுக்கெல்லாம் என் மீது கோபம் இருக்கும் என்று எனக்குத் தெரியும். உங்கள் கோபத்தைக் காண்பிக்க என் மீது கல் வீசுவது தான் நியாயம்.

இந்தக்கார் என்னுடையதல்ல. எனது நண்பருடையது. இந்தக் கார் மீது கல் வீசினால் அது என்னைப் பாதிக்காது. அதனால் நான் தனியாக நிற்கிறேன். உங்கள் கோபம் தீரும் மட்டும் என் மீது கல் வீசுங்கள்!" என்றார். இதைக்கேட்ட கல் எறிந்தவர்கள் வெட்கித் தலை குனிந்து சென்றனர். எத்தகைய சூழ்நிலையையும் தைரியத்துடன் எதிர் கொண்ட மகாத்மா காந்தியின் இந்த உறுதியே இன்றைய சுதந்திர இந்தியாவை உருவாக்கியது.

இளைஞர்களாகிய எம்மிடம் இருக்க வேண்டிய மிக முக்கிய பண்பு இது. வாழ்வில் ஏற்படும் தடைகளை தைரியத்துடன் எதிர் கொள்வதே நாம் கற்க வேண்டியது. மற்றவை அனைத்தும் தாமாகவே வந்து சேரும்.



அன்பளிப்பு ரூ. 10.00